திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த அரசு ஊழியர்கள் மற்ற மாநிலங்களில் பணி புரிகிறபோது, அவர்கள் மனுப்போட்டால் அவர்களுக்குக் கடன் கொடுக்க அரசு முன்னுரிமை கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, எந்த மாவட்டத்தில் யார் வேலை செய்தாலும் அவர்கள் மனுப் போட்டால் அந்த மனுவை அந்தந்த மாவட்டங்களிலே உள்ள நிதி ஆதாரத்திற்கு ஏற்ப பரிசீலனை செய்து, எத்தனை பேருக்குக் கொடுப்பது என்று முடிவெடுக்கப்படும்.

*திரு. எம். செல்லமுத்து: தலைவர் அவர்களே, கொடுக்கக் கூடிய மனுக்கள் பரிசீலனை செய்யப்படுகிறது என்று நீண்ட நாட்கள் எடுத்துக் கொள்கிறார்கள். அதற்கு மாறாக கொடுத்து மூன்று மாதங்களுக்குள் இதைப் பரிசீலனை செய்து கடன் கொடுக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு டைம் பவுண்டு ஆர்டர் போடுவது Administratively it may not be advisable. அதற்காகத் தான் விரைவிலே இதைப் பரிசீலனை செய்து கொடுங்கள் என்று சொல்லுகிறோம். என்றாலும் எங்காவது 'அன்டியு'டிலே இருக்கு மானால் மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால் அதிகமாக காலதாமதம் செய்யக் கூடாது என்று அறிவிக்கை அனுப்பப்படும்.

5. அரசினர் சட்ட முன்வடிவு.

ஷெரிப் நியமனத்திற்கு வகை செய்யும் முத்திரைப் பத்திர (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் —

"1983 ஆம் ஆண்டு ஷெரிப் நியமனத்திற்கு வகை செய்யும் முத்திரைப் பத்திர (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS